வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 04.12.2024 புதன்கிழமை இதழ் : 338 பக்கங்கள் : 12

# மாகாணசபை குறித்து தமிழரசு அநுரவுடன் இந்த வாரம் பேச்சு!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க சபையில் நேற்று அறிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 04

**மாகாண சபை முறைமை தொடர்பில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் கலந்துரையாடுவதற்கு இவ்வாரம் நேரம் ஒதுக்கித் தரப்படும். இது குறித்து அவருடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் என சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனிடம் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில், பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் எழுப்பிய ஒழுங்கு பிரச்னைக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க போவதாக ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா வெளியிட்டிருந்த கருத்து தொடர்பில் நேற்று பாராளுமன்றின் கன்னி அமர்வின் போது கேள்வி எழுப்பப்பட்டது. தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வினவினார்.

ஜே.வி.பியின் பொதுச் செயலர் 11

## அமெ. உதவிச் செயலாளர் நாளை இலங்கை வருகிறார்!



கொழும்பு, டிசெ. 04

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ நேற்று முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இந்தியா, இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இவரின் வருகை பிராந்திய செழிப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு தெற்காசியாவின் முக்கிய பங்காளிகளுடன் ஒத்துழைப்பை 11

## டிசெம்பர் நடுப்பகுதியில் டில்லி செல்கின்றார் அநுர

### முக்கிய சந்திப்புக்களில் ஈடுபடுவார்

கொழும்பு, டிசெ. 04

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 16ஆம் திகதி டில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி தகவல் வெளியாகியுள்ளது.

16 மற்றும் 17 ஆம் திகதிகளில் இந்தியாவில் முக்கியத்துவமிக்க சந்திப்புகளில் ஜனாதிபதி 11

## சுயநிர்ணய உரித்து அங்கீகரிக்கப்பட்டால் உங்களோடு இணைந்து பயணிக்கத் தயார்!



### பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி.

கொழும்பு, டிசெ. 04

புதிய அரசின் ஆட்சிக் காலத்தில் இனவாதமற்ற இலங்கை நாட்டில் தமிழர்களது சுயநிர்ணய உரித்துகள் அங்கீகரிக்கப்படும் நிலை உருவாகுமானால், நாங்கள் உங்களோடு இணைப்பங்காளர்களாக பயணிக்கத் தயாராக இருக்கிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் 11

## அரச பணியாளரை குறைக்காவிட்டால் பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிடும்

### இலங்கை அரசு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 04

இலங்கையின் செலவீனத்தை குறைக்க 5.5 அரச பணியாளர்களை நீக்காதுவிடின் நாம் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டி வரும் என்று ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றிய போது அவர் ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் எதிர்காலத்தில் பாரிய அரச துறையை கொண்டிருக்க முடியாது. அரச பணியாளர்களின் எண்ணிக்கையை 11

## பாராளுமன்றில் அர்ச்சுனா நேற்றுத் தாக்கப்பட்டாரா?

கொழும்பு, டிசெ. 04

பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தம்மைத் தாக்கியதாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பாராளுமன்றுக்கு தெரிவாகியுள்ள வைத்தியர் ராமநாதன் அர்ச்சுனா குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமக்கான நேர ஒதுக்கம் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக பாராளுமன்றில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத் துக்கு சென்றிருந்த போது தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் 11

## நாட்டில் பயங்கரவாதத்தை முற்றாக புறக்கணிப்போம்!

### எம்மோடு இணையுங்கள் என்கிறார் பிரதமர் ஹரிணி

கொழும்பு, டிசெ. 04

பயங்கரவாதத்தை முற்றாக புறக்கணிப்போம். எம்மோடு இணைந்து செயற்பட அனைவரும் முன்வாருங்கள் என பிரதமர் ஹரிணி அமரசூரிய அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் 11

## அரசை கவிழ்க்க நினைப்போர் சிறை செல்லவேண்டி ஏற்படும்!

### எச்சரிக்கின்றார் அமைச்சர்

கொழும்பு, டிசெ. 04

அநுர அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சிக்கும் எதிர்க் கட்சிகள் எதிர்காலத்தில் சிறைச்சாலைக்கு செல்ல வேண்டி ஏற்படும் என அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

ரிதிமாலியத்த பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். 11

## பயங்கரவாத தடைச் சட்டம் மூலம் ஊடகங்களை நசுக்குகின்றது அரசு

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 04

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிப்பதாகக் கூறிய தற்போதைய அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகங்களை நசுக்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், அரசாங்கத்துக்கு பெரும் ஆணையைப் பெறுவதற்கு சமூக ஊடகங்கள் உதவியதாகவும், ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் சமூக ஊடக ஆர்வலர்கள் உரிய சட் டத்தைப் பயன்படுத்தி 11

## மூன்று நாள் காய்ச்சலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

வடமராட்சி, டிசெ. 04

மூன்று நாள் நீடித்த காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மண்டபக்காடு, கெருடாவில் தெற்கு, தொண்டை மானாறைச் சேர்ந்த கனகன் சண்முகம் (வயது- 62) என்பவராவார்.

காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அவரினால் நடக்க முடியாத நிலையில் காலை பருத்தித்துறை ஆதார 11

## சபை அமர்வு இன்று இரவு 9.30 வரை!

கொழும்பு, டிசெ. 04

பாராளுமன்றத்தை இன்று இரவு 9.30 மணி வரை நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த சில நாட்களாக நிலவிய 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை நீக்கப்படாது!

## மூன்று வருடங்களின் பின்னரே புதிய அரசமைப்பு

கொழும்பு, டிசெ. 04
மாகாண சபை முறைமையை நீக்குவதற்கு எந்த வொரு தீர்மானத்தையும் தற்போதுவரை எடுக்கவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

புதிய அரசியலமைப்பு மூன்று வருடங்களின் பின்னரே கொண்டுவரப்படும். அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்துரையாடப் போதுமான கால அவகாசம் உள்ளது. புதிய அரசியலமைப்பில் மாகாண சபை முறை தொடர்ந்தால் தற்போது இருக்கும் அதிகாரங்களுக்கு அப்பாலான அதிகாரப்பகிர்வு இருக்காது என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ,

மாகாண சபை முறையை நீக்குவது தொடர்பில் இந்தத் தருணம்வரை அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை. புதிய அரசியலமைப்பை கொண்டுவர மூன்று வருடங்கள்வரை செல்லும். அதனால் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற முறை தொடர்பில் தமது சிபாரிகளை அனைவரும் முன்வைக்கப்படும்.

புதிய அரசியலமைப்பு மக்களுடனான கலந்துரையாடலின் பின்னரே கொண்டுவரப்படும். இதுதொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்த போதிய கால அவகாசம் உள்ளது. மாகாண சபை முறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தை இதுவரை எடுக்கவில்லை.

புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் தருணத்தில் இதுதொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தலாம். மாகாண சபை முறை புதிய அரசியலமைப்பில் தொடர்ந்தால் தற்போது இருக்கும் அதிகாரங்களுக்கு மேலதிகமான அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் குறைக்கவும் படாது." என்றார். (அ)

# மாகாண சபை முறைமையை நீக்க அரசு முயற்சிக்கக்கூடாது!

## ஜனாதிபதிக்கு டக்ளஸ் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 04
மாகாண சபைகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வை நீக்குவதற்கு முயற்சிக்கப்படுமாயின், அது தமிழ் மக்களின் உணர்வுகளை பாதிக்கும் செயல் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

ஆட்சிப் பீடமேறியுள்ள தற்போதைய அரசாங்கத்தினால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் 13 ஆம் திருத்தச் சட்டம் நீக்கப்படும் என்று ஆளுங்கட்சி முக்கியஸ்தர்களுள் ஒருவரான ரில்வின் சில்வாவினால் அண்மையில் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்காவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் இதனை குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தற்போதைய அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாணசபைகளை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு என்பது, இதுவரை காலமும் கௌரவமான அரசியல் உரிமைகளை இந்த நாட்டிலே பெற்றுக்கொள்வதற்காக தமிழ் மக்கள் எதிர்கொண்ட அவலங்களுக்கு கிடைத்துள்ள சிறிதளவான பரிகாரமாகவே நோக்கப்படுகின்றது.

மாகாணசபை முறைமையினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலமே தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கான தீர்வை காண முடியும் என்பதை ஈ.பி.டி.பி. கட்சியினராகிய நாமும் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வருகின்றோம்.

கடந்த காலங்களில் 13 ஆம் திருத்தச் சட்டத்தினை பாதுகாப்பதற்காக பல்வேறு முயற்சிகளையும் நாம் மேற்கொண்டிருந்தமையை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

குறிப்பாக 2010 - 2015 காலப் பகுதியிலும் 13 ஆம் திருத்தச் சட்டத்தினை வலுவிழக்கச் செய்யும் முயற்சியை மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டிருந்த அப்போதைய ஆட்சியாளர்கள் முன்னெடுத்திருந்த நிலையில், அரசாங்கத்தின் அங்கமாக நாம் இருந்தபோதிலும், ஆளும் தரப்பில் அப்போதிருந்த தென்னிலங்கையை சேர்ந்த முற்போக்காளர்களான அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து எமது ஆட்சேபனையை வெளிப்படுத்திய நிலையில் அந்த முயற்சி கைவிடப்பட்டிருந்தது.

அண்மையில் சிநேகிதபூர்வமாக உங்களை சந்தித்த வேளையிலும், 13 ஆம் திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய தன் அவசியத்தினையும், அதனை கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்துவது சாத்தியமான பொறிமுறையாக இருக்கும் என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

**பாதிக்கும் வகையிலான செயல்பாடு**

அத்துடன், அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் மக்களின் கணிசமான ஆதரவு உங்களுக்கு கிடைத்திருக்கின்ற நிலையில், அவர்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள உங்களுக்கு, புதிய அரசியலமைப்பு தொடர்பாக சிந்திப்பதற்கு முன்னர் தற்போதைய அரசியலமைப்பினை முழுமையாக நடைமுறைப் படுத்தி பாதுகாக்க வேண்டிய தார்மீக கடமை இருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பலாலி விமான நிலையத்தில் பயணிகளுக்கு அசௌகரியமா?

## அறிவிக்க தொலைபேசி இலக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 04
பலாலி விமான நிலையத்தில் காணப்படுகின்ற அசௌகரியங்கள் தொடர்பில் விசேட தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்க முடியும் என வட மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார்.

அதற்கிணங்க பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக பயணிப்பவர்கள், அங்குள்ள அதிகாரிகளால் ஏதாவது அசௌகரியங்களை எதிர்கொண்டால் விமான நிலையத்தின் செயற்பாட்டு முகாமையாளர் அமரதுங்க 0774653915 என்ற இலக்கத்துக்கோ அல்லது வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் 021 221 9373 என்ற இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ள முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பயணிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தத் தகவலை வட மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (அ)

# அனுமதிப்பத்திரமின்றி கால்நடை ஏற்றிச் சென்ற நான்கு பேர் கைது

கிளிநொச்சி, டிசெ. 04
கிளிநொச்சி மாவட்டத்தின் புளியம்பொக்கணைப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிக் கொண்டு செல்ல முற்பட்ட 12 மாட்டுக் கன்றுகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

லொறி மற்றும் உழவு இயந்திரம் மூலம் இவற்றைக் கொண்டு செல்ல முற்பட்ட நான்கு பேர் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.


கால்நடை உரிமையாளரின் விற்பனை செய்வதற்கான கடிதம், கால்நடை கொண்டு செல்வதற்காக கால்நடை வைத்தியரின் சிபாரிசு கடிதம் மற்றும் கால்நடைகளை கொண்டு செல்வதற்கான வாகனத்தில் தண்ணீர், உணவு என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுக்காமல் கொண்டு செல்லப்பட்ட குற்றச்சாட்டில் நான்கு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர் நால்வரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மன்னார் மாவட்டத்தில் சீரற்ற காலநிலை; 7,603 ஹெக்ரேயர் விவசாய செய்கை அழிவு

மன்னார், டிசெ. 04
மன்னார் மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக நிலவி வந்த சீரற்ற காலநிலை காரணமாகவும், அதிக மழை காரணமாகவும் 7 ஆயிரத்து 603 ஹெக்ரேயர் விவசாய செய்கை அழிவடைந்துள்ளதாக, மன்னார் மாவட்ட கமநல சேவைகள் நிலையம் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இலுப்பைக்கடவை கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட ஆயிரத்து 100 ஹெக்ரேயர் விவசாய நிலங்களும், மாந்தை பகுதியில் ஆயிரத்து 168, நானாட்டான் 768 ஹெக்ரேயருமாக மொத்தம் 7603 ஹெக்ரேயர் விவசாய செய்கை அழிவடைந்துள்ளன.



இம்முறை மன்னார் மாவட்டத்தில் காலபோக செய்கைக்கு என 11 ஆயிரத்து 776 ஹெக்ரேயர் விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் 4 ஆயிரத்து 173 ஹெக்ரேயர் விவசாய செய்கை மாத்திரம் தற்போது பகுதி அளவில் காப்பாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இம்முறை விவசாயச் செய்கைக்காக பல விவசாயிகள் அரச மற்றும் தனியார் வங்கிகளிலும், கிராம மட்ட அமைப்புகளிடமும் கடன்களை பெற்றுள்ள நிலையில் அவற்றை மனிதாபிமான அடிப்படையில் அரசாங்கம் தள்ளுபடி செய்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# இந்திய மீனவர்கள் 23 பேர் நிபந்தனையுடன் விடுதலை

யாழ்ப்பாணம், டிசெ. 04
இந்திய மீனவர்கள் 23 பேர் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 10 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்புக்கு அண்மையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ். ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் சுபாஸ்கரன் முன்னிலையில் நேற்றுக்காலை சிறைச்சாலை அதிகாரிகளால் குறித்த மீனவர்கள் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, வழக்கை ஆராய்ந்த நீதிவான் இந்திய மீனவர்கள் 23 பேருக்கும் 6 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

அத்துடன் 23 பேரில் 3 பேர் படகோட்டிகள் என்பதால் அவர்களுக்கு தலா 4 மில்லியன் ரூபாய் அபராத தொகையை செலுத்துமாறும் அதேவேளை 6 மாத சிறைத்தண்டனையும் மேலதிகமாக வழங்கி உத்தரவிட்டார்.

அபராத தொகையை செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக 3 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
04.12.2024 புதன்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## கோமாளித்தனத்தின் ஆபத்து

தேசிய மக்கள் சக்தி அலையின் முன்னால் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தோல்வியடைந்தனர். ஆனால், கட்சிகளின் தலைவர்கள் பலரது தோல்விக்கு மத்தியில், அரசியலோடு எவ்வித தொடர்பும் இல்லாத. வெறுமனே சமூக ஊடகங்களின் மூலம் கிடைத்த பிரபல்யத்தை கொண்டிருந்த மருத்துவர் ஒருவர், சுயேச்சைக் குழுவில் வெற்றிபெற்றிருந்தார். சாவகச்சேரி வைத்தியசாலையிலுள்ள சில நிர்வாக சீர்கேடுகளை வெளிப்படுத்தியதன் காரணமாகவே அவர் சமூகத்துக்கு அறிமுகமானார்.

ஆரம்பத்தில் அவர் ஒரு சமூக அக்கறையுள்ள நபராகவே நோக்கப்பட்டார் - ஆனால், அதன் பின்னர் அவரது பேச்சு மற்றும் செயல் சமூக நோக்குக் கொண்டதாக இருக்கவில்லை - மாறாக, தான் தொடர்ந்தும் மற்றவர்களால் உற்றுநோக்கப்பட வேண்டும் என்னும் இச்சையின் வெளிப்பாடாகவே தெரிந்தது. ஒரு குறித்த ஆர்வம் ஒரு மனிதனுக்குள் அதிகரிக்கின்ற போது, அவனது நடத்தைகள் சற்று மாறுபட்டதாகவே இருக்கும். இவ்வாறானதொரு பின்புலத்தில் எவருமே எதிர்பாராத வகையில் அவர் வடக்கு மக்களால் நாடாளுமன்ற உறுப்பிரான தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

தமிழ் மக்கள் சார்பில் பலரை மக்கள் காலத்திற்கு காலம் நாடாளுமன்றம் அனுப்பியிருக்கின்றனர். அவ்வாறானவர்களில் ஆற்றலுள்ளவர்களும் இருந்தனர் ஆற்றலில்லாதவர்களும் இருந்தனர். இப்போதும் அப்படித்தான். நாடாளுமன்றம் சென்றிருப்பவர்கள் அனைவரும் போதிய தகுதிகளைக் கொண்டிருக்கின்றனர் என்று கூறிவிட முடியாது. ஆனால் இம்முறை நீண்டகாலமாக அரசியலில் இருந்தவர்கள் மற்றும் ஆற்றலுள்ளவர்கள் சிலர் தோல்வியடைந்திருக்கும் நிலையில், அரசியலுக்கு அறிமுகமில்லாத ஒருவர் நாடாளுமன்றம் சென்றிருக்கின்றார்.

ஆனால் விடயம் மிகவும் சிக்கலானது. ஒருவர் பொது வெளியில் தன்னை எவ்வாறும் வெளிக்காட்டிக் கொள்ளலாம். அது அவரது தனிப்பட்ட விடயம் ஆனால், தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர், நாடாளுமன்றத்திற்குள் நடந்து கொள்ளும் முறையானது, அது அவர் எப்படியும் பேசிவிட்டுப் போகட்டும் என்று சமூகம் இருந்து விடக்கூடாது. ஏனெனில் - அது ஒட்டுமொத்த இனத்தின் பிரச்னை.

நாடாளுமன்றத்திற்குள் அவர் பேசும் விடயங்கள், நடந்துகொள்ளும் முறை அனைத்தும் பொது வெளிகளில் ஒரு நகைச்சுவையாகவே நோக்கப்படுகின்றது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் பேச்சுக்கள், செயல்கள் மற்றவர்களால் நகைச்சுவையாக நோக்கப்படுகின்றது என்றால், அதன் பொருள் அவரைத் தெரிவு செய்த மக்களும் நகைச்சுவைக்குரிய மக்கள் கூட்டமாகவே நோக்கப்படுகின்றனர், என்பதுதான் அதன் பொருளாகும்.

முதல் நாள் அமர்விலேயே எதிர்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்து அடாவடித்தனம் செய்யும் ஒருவராக அவர் தன்னை வெளிக்காட்டியிருக்கின்றார். நாடாளுமன்ற அலுவலர்கள் சுட்டிக் காட்டிய பின்னர் கூட, அவர் தனது தவறை புரிந்துகொள்ள முயற்சிக்கவில்லை. இது பொது வெளிகளில் நகைச்சுவையாக நோக்கப்பட்டாலும் கூட, ஒரு பாதிக்கப்பட்ட இனத்தின் சார்பில் நாடாளுமன்றம் சென்றிருக்கும் ஒருவரது பொறுப்பற்ற நடவடிக்கைகள் தமிழ் மக்களை ஒரு பரிகசிப்புக்குரிய சமூகமாவே மற்றவர்கள் நோக்கும் நிலைமையை ஏற்படுத்தும். அவர் நாடாளுமன்றத்திற்குள் பேசும் ஒவ்வொரு விடயமும் மற்றவர்களால் நகைச்சுவாக நோக்கப்படுகின்றது - இது தொடருமாயின், தமிழ் மக்களின் அரசியல் விடயங்கள் அனைத்தும் பரிகசப்புக்குரிய ஒன்றாகவே நோக்கப்படும்.

# ஓர் உண்மையைகூட கண்டறியாத ஓ.எம்.பி. கலைக்கப்பட வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 04

ஏழு வருடங்கள் கடந்தும் ஓர் உண்மையைகூட கண்டறியப்படவில்லை. எனவே, செயல்திறனற்ற ஓ. எம். பி. உடனடியாக கலைக்கப்பட வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் 15 வருடங்களாக எமது உறவுகளைத் தேடி வருவதுடன் 20. 02. 2017 இலிருந்து தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றோம். தொடர்ந்து வந்த அரச தலைமைகளால் காலத்துக்குக் காலம் ஏமாற்றப்பட்டு வந்ததால் சர்வதேச நீதியை வலியுறுத்தி இன்னும் போராடி வருகின்றோம் என்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய (ஓ. எம். பி.) அலுவலகத்துக்கு புதிய நியமன கோரிக்கை தொடர்பில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஓ. எம். பி. சட்டம் வரையப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை பாதிக்கப்பட்டவர்களின் அபிப்பிராயங்களுக்கோ அல்லது அவர்களின் வேண்டுகோள்களுக்கோ செவிசாய்க்காது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சர்வாதிகாரத்துடன் பாரபட்சமாகவே நடத்தப்பட்டு வந்தார்கள்.

பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடியோ அவர்களின் பங்குபற்றலுடனோ அப்பொறிமுறையைச் செயல்படுத்த முனைப்புக்காட்டப்படுவதில்லை. மாறாக நாங்கள் செய்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சர்வாதிகாரப் போக்கும் வெளிப்படைத்தன்மையற்ற நிலையுமே காணப்படுகிறது.

எந்தப் பொறிமுறையும் சம்பந்தப்பட்டவர்களின் பங்களிப்போ, விருப்போ இல்லாவிட்டால் வெற்றியளிக்காது என்ற கூற்றை ஏற்றுக் கொள்ள எவரும் தயாரில்லை.

ஓ. எம். பி. சட்டம் உருவாக்குவதற்காக, பாதிக்கப்பட்டவர்களின் கருத்தறிய ஏற்படுத்தப்பட்ட கலந்தாலோசனைச் செயலணியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் எவ்வித ஊதியமும் இன்றி ஊர் ஊராகச் சென்று கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்து பரிந்துரைகளை அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் வரை அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருந்தோம்.

பரிந்துரைகள் கையளிக்கப்படும் முன்னரே அவசர அவசரமாக வரையப்பட்ட ஓ. எம். பி. சட்டமூலத்தில், எமக்கு உடன்பாடில்லாத விடயங்களைச் சுட்டிக் காட்டி சில திருத்தங்களை செய்யும்படி கேட்டிருந்தோம்.

ஆனால், அதற்குரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அது மாத்திரமல்ல கலந்தாலோசனைச் செயலணியால் பரிந்துரைக்கப்பட்டவையில் முக்கியமான பரிந்துரைகள் பல கருத்தில் கொள்ளப்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எதையும் எடுக்காதது மட்டுமல்லாது, எமது எதிர்ப்பையும் மீறி ஓ. எம். பி. அலுவலகத்தை திறப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் உறுதியுடன் இருந்தார்கள்.

அதனால் யாழ்ப்பாணத்தில் அதிகாலை 4.30 மணிக்கும், கிளிநொச்சியில் ஊரடங்கு அமுலில் இருந்த நேரத்திலும் அலுவலகத்தைத் திறந்தார்கள்.

30/1 தீர்மானத்தின்படி, உண்மை, நீதி, இழப்பீடு, மீள நிகழாமை ஆகிய நான்கு தூண்கள் முக்கியமானவை எனக் கூறப்பட்டது. உண்மையை கண்டறிந்தபின் அவ்விடயம் நீதிப்பொறிமுறைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், ஓ. எம்.பி. ஆரம்பித்து ஏழு வருடங்கள் ஆகின்ற போதும் ஓர் உண்மை கூட கண்டறியப்படவில்லை. ஆனால், அதற்குள் நீதியை ஓரங்கட்டிவிட்டு இழப்பீட்டு அலுவலகம் திறக்க வேண்டிய தேவை என்ன? உண்மையை கண்டறியாமலே பணத்தை கொடுத்து ஏழைகளின் வாயைமூடி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை குறைத்துக் காட்டுவதற்காகவா? - என்று அந்த அறிக்கையில் மேலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (எ-5)


## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்புகளை வழங்க முடியும்

## இம்பக்ட் அமைப்பினர் ஆளுநரிடம் உறுதியளிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 04

வடக்கு மாகாணத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு தம்மாலான ஒத்துழைப்புகளை வழங்க முடியும் என்று இம்பக்ட் அமைப்பினர், ஆளுநரிடம் உறுதியளித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில்சார் புலமையாளர்களை உள்ளடக்கிய இம்பக்ட் அமைப்பினர் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

தமது அமைப்பால் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆளுநருக்கு விவரித்தது டன், மருத்து வத்துறையில் எதிர்கா லத்தில் மேற்கொள்ள வுள்ள திட்டங்களை முன்னெ டுப்பதிலுள்ள சவால்கள் தொடர்பிலும் அவற்றை எவ்வாறு நிவர்த் திக்கலாம் என் பது தொடர் பிலும் கலந்து ரையா டினர். பெண் கள் வலுவூட்டல் மற் றும் சமூக மேம்பாடு தொடர்பிலும் தமது திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்து ஆளுந ருடன் கலந்துரையாடியதுடன், எதிர்காலத்தில் வடக்கின் அபி விருத்திக்கு தம்மாலான ஒத்து ழைப்புகளை வழங்க முடியும் எனவும் ஆளுநருக்கு உறுதிய ளித்தனர்.

இந்தச் சந்திப்பில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர், சிறுநீரக தொகுதி அறுவை சிகிச்சை நிபுணர் பா. பாலகோபி, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர், சமுதாய மருத்துவ நிபுணர் எஸ். குமரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர், மகப்பேற்று அறுவைச் சிகிச்சை நிபுணர் சி. ரகுராமன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர், சிறுநீரக வைத்திய நிபுணர் பிரம்மா ஆர். தங்கராஜா, பௌதீகவியல் ஆசிரியர் ரா. குமரன், எழுத்தாளர் ம. அருளினியன், பொறியியலாளர் ந. நந்தரூபன் ஆகியோர் பங்கேற்றனர்.

(எ-05)

# வடதாரகை படகு மீண்டும் பழுது பல மணி நேரம் காத்திருந்த மக்கள்




யாழ்ப்பாணம், டிசெ. 04

வடதாரகை பயணிகள் படகில் ஏற்பட்ட பழுது காரணமாக நெடுந்தீவுக்கு செல்வ வந்த மக்கள் சுமார் மூன்றரை மணித்தியாலங்களாக காத்திருந்தனர்.

குறிகாட்டுவானில் இருந்து நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்க வேண்டிய வடதாரகை படகு, பழுது காரணமாக பல மணி நேரம் தரித்து நின்றது.

இதனால், நெடுந்தீவு செல்ல முடியாமல் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் என நூற்றுக் கணக்கானோர் இரவு 7. 30 மணி வரை கடும் குளிரில் குறிகாட்டுவான் இறங்குதுறை யில் காத் திருந்தனர். அடிக்கடி பழுதடையும் வடதாரகை மற் றும் படகுகளால் நெடுந்தீவு மக் கள் பெரிதும் பாதிக்கப் பட்டு வருவதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

(எ-05)

# வவுனியா பேருந்து நிலையத்தில் நேற்றுக்காலை அமைதியின்மை!

## நேரக்கணிப்பாளர் மீது தாக்குதல்

வவுனியா, டிசெ. 04

இ. போ. ச. மற்றும் தனியார் பேருந்து தரப்பினருக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டமையால் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

நேற்றுக் காலை வவுனியாவில் இருந்து கல்முனை நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த இ. போ. ச. பேருந்து தரப்பினருக்கும் தனியார் பேருந்து தரப்பினருக்கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. இ. போ. ச. பேருந்து புறப்படுகின்ற நேரம் தொடர்பிலேயே வாய்த் தர்க்கம் ஏற்பட்டது.

இதனால் பேருந்து நிலையப் பகுதியில் இரு தரப்புக்கும் இடையில் குழப்பநிலை ஏற்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்தினர்.

இதேவேளை, பேருந்து நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்துச் சபையின் நேரக்கணிப்பாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்து அவர் வவுனியா மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருவ துடன், இ. போ. ச. பேருந்து ஒன்றும் தனியார் பேருந்து ஒன்றும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டன.

(எ)

# புகலிடக் கோரிக்கைகள் தொடர்பில் சுவிஸ் தூதரக அதிகாரிகள் ஆராய்வு

கிளிநொச்சி, டிசெ. 03

மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல் மற்றும் புகலிடக் கோரிக்கைகள் குறித்து கிளிநொச்சி பதில் அரச அதிபருடன் சுவிஸ் தூதரக அதிகாரிகள் கலந்துரையாடினர்.

இலங்கைக்கான சுவிஸ் தூதரக மற்றும் குடிவரவு - குடியகழ்வுத் திணைக்கள அதிகாரிகள், கிளிநொச்சிக்கு சென்று பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனுடன் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது, கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள், பொருளாதார நிலவரங்கள், மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல் மற்றும் புகலிடக் கோரிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர்.

(எ)

டிசம்பர் - 04 புதன்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 19
நல்ல நேரம் :9.00 - 10.30
ராகு காலம் :12.00-1.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதாக திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். தைரியம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்கள் வாங்குவீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**கடகம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர் கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**சிம்மம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். செலவுகளைக் குறைக்கதிட்டமிடுவீர்கள். கனவு நனவாகும்.

**கன்னி**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். நீண்டநாட்களாக தள்ளிப் போன காரியம் இன்று முடியும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித்தருவீர்கள். தோற்றப் பொலிவு கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். புது நட்பு மலரும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்னைகள் அதிகமாகும். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். சகோதர வகையில் மனஸ்தாபங்கள் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். இனிமையான நாள்.

**மீனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். புதுவேலை கிடைக்கும். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்புறுத்தி திணிக்கப்பட்டதே இந்திய-இலங்கை ஒப்பந்தம்!

## சட்டக் கல்லூரி அதிபர் பிரஷாந்த

கொழும்பு, டிசெ. 03

**இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தமானது, இந்தியாவினால் வற்புறுத்தப்பட்டு இலங்கை மீது திணிக்கப்பட்டதாகவும், இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சட்டங்கள் பிறிதொரு நாட்டினால் தீர்மானிக்கப்படுவது ஏற்புடையதல்ல எனவும் இலங்கை சட்டக் கல்லூரியின் அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரஷாந்த லால் டி அல்விஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.**

சர்வதேச உறவுகள் மற்றும் சட்டம் தொடர்பான சர்வதேச ஆய்வு மாநாடு ஒன்று கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு விசேட உரையாற்றுகையிலேயே பிரஷாந்த லால் டி அல்விஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச உறவுகளையும், சட்டத்தையும் இணைத்து இலங்கையில் நடத்தப்படும் முதலாது மாநாடாக இந்த மாநாடு அமைந்திருப்பதாகப் பாராட்டிய அவர், பல்வகை சட்டங்கள் குறித்தும், பிரித்தானியாவிடமிருந்து இலங்கைக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த சட்டங்கள் பற்றியும் பகிர்ந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து சர்வதேச உறவுகள் என்று வருகின்ற போது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 1987 ஆம் ஆண்டு கைச்சாத்தி டப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம், இந்தியாவினால் வற்புறுத்தப்பட்டு, இலங்கை மீது திணிக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டிய அவர், எனவே அதனூடாகக் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தையும் முறையற்ற விதத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தம் என விமர்சித்தார்.

அதுமாத்திரமன்றி தான் இந்நாட்டின் சகல மாகாணங்களிலும் பணியாற்றியிருப்பதாகவும், மாகாண சபை முறைமையினால் ஒவ்வொரு மாகாணத்திலும் மாறுபட்ட சட்ட விதிகள் நடைமுறையில் இருப்பதாகவும் குறிப்பிட்ட பிரஷாந்த லால் டி அல்விஸ், இவ்வாறானதொரு கட்டமைப்பு இந்தியா போன்ற பரந்துபட்ட நாட்டுக்குப் பொருத்தமானதாக இருப்பினும், இலங்கைக்குப் பொருந்தக்கூடியதல்ல எனவும், அத்தோடு இலங்கையில் நடைமுறைப்ப டுத்தப்படவேண்டிய சட்டங்கள் பிறிதொரு நாட்டினால் தீர்மானிக்கப்படுவது ஏற்புடையதல்ல எனவும் தெரிவித்தார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை ஓர் சட்டக்கட்டமைப்பெனத் தான் ஒருபோதும் கூறப்போவதில்லை எனக் குறிப்பிட்ட அவர், அங்கு அரசியலமைப்புடுத்தியே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் கூறினார்.

குறிப்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்கள் கொண்டுவரப் பட்டபோது மத்திய கிழக்கு நாடுகள் அதனை எதிர்த்து, இலங்கை ஆதரவாக செயற்பட்டதாகவும், இருப்பினும் இலங்கையில் கட்டாய உடற்தகனம் மேற்கொள்ளப் பட்டதை அடுத்து அந்த மத் திய கிழக்கு நாடுகள் அனைத் தும் இலங்கைக்கு எதிராகத் திரும்பியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

நீர்மின் உற்பத்தி அதிகரிப்பு

# கட்டணத்தை 40 வீதம் குறைக்க யோசனை!

கொழும்பு, டிசெ. 04

மழையுடனான காலநிலை காரணமாக நீர்மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

அதனால், மின் உற்பத்தி நிலையங்கள் அதிக கொள்ளளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாக இலங்கை மின்சார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, கடந்த முதலாம் நாட்டின் மொத்த மின்சாரத் தேவையில் 62.2 வீதம் நீர் மின் நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் 35 வீதம் முதல் 40 வீதம் வரை மின்சாரக் கட்டணத்தை குறைக்கவேண்டும் என மின்சார பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க குறிப்பிட்டார். (அ)

# 5 பிரதி பொலிஸ்மா அதிபர்கள் உட்பட 54 பேருக்கு இடமாற்றம்

கொழும்பு, டிசெ. 04

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உட்பட பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் 35 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தவிர 7 பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் 7 உதவி பொலிஸ் அத்தியட்சர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஈ.எம்.எம்.எஸ். தெஹிதெனிய நுகேகொடை பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# வட்டி விகிதத்தை நிலையாக பேணுவது மிக அவசியமாகும்

## மத்திய வங்கி ஆளுநர் கருத்து

கொழும்பு, டிசெ. 04

பணவீக்கம் அதிகரிக்காத வகையில் நிலையான வட்டி வீதத்தை பேணுவது மத்திய வங்கியின் பொறுப்பாகும் எனவும், கடந்த காலங்களில் அவ்வாறு நடக்கவில்லை எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பணவீக்கம் வேகமாக அதிகரித்துள்ள போதிலும், தற்போதைய நிதிக் கொள்கையின் படி இது நடக்காது எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

புதிய பணம் அச்சிடுதல் மற்றும் பணவீக்கம் தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், வட்டி விகிதங்களை நிலையானதாக வைத்திருக்க தேவையான பணத்தை மத்திய வங்கி வெளியிடுவதாக சுட்டிக்காட்டினார்.

மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம், மத்திய வங்கிக்கு நேரடியாகப் பணத்தை அச்சிடும் திறன் இல்லை எனத் தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர், நாளாந்த நிலையான பணப் புழக்கத்தை பேணுவதற்கு தேவையான பணத்தை மத்திய வங்கி வெளியிடும் எனவும் தெரிவித்தார். (அ)

# ரயில் சேவைகள் தாமதம்!

கொழும்பு, டிசெ. 04

கரையோர மார்க்கம் மற்றும் சிலாபம் மார்க்கமூடான ரயில் சேவைகள் நேற்று பாதிக்கப்பட்டதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

அளுத்கமவில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த ரயிலில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால் கரையோரப் பாதையில் தாமதம் ஏற்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை, நீர்கொழும்பு ரயில் நிலையத்தில் சமிக்ஞை கோளாறு காரணமாக சிலாபம் மார்க்கமூடான ரயில் சேவைகளும் தடைப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ரயில் சேவைகளை வழமைக்கு கொண்டு வருவதற்கான பணிகள் நடந்து வருவதாகவும் ரயில்வே திணைக்களம் கூறியது.

# வெள்ளநீர் வெளியேற்றும் பணியின்போது குழப்பம்!

## பொலிஸார் துப்பாக்கி பிரயோகம்

கொழும்பு, டிசெ. 04

வாய்க்கால் ஒன்றை வெட்டி துப்பரவு செய்யும் பணியின் போது இரு குழுக்களுக்கு இடையில் ஏற்படவிருந்த மோதலை பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக தெரிவிக்கப்பட்டது.



கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக மதுரங்குளி - கஜூவத்தை, பரியாரி தோட்டம் ஆகிய பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நின்றதுடன் இதனால் அப்பகுதியில் வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர்.

இந்நிலையில், தனியாருக்கு சொந்தமான தென்னந் தோட்டத்தின் நடுவே வெள்ளநீர் வெளியேறும் பழமை வாய்ந்த வாய்க்காலை பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் வெட்டி, துப்புரவு செய்யும் பணியை நேற்று முன் தினம் மாலை மக்கள் முன்னெடுத்தனர்.

இதன்போது, அங்கு மூன்று உழவு இயந்திரங்களில் இரும்புக் கம்பிகள், கம்புகள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன், வருகை தந்த அந்த தோட்ட உரிமையாளரிடம் பணி புரியும் தொழிலாளர்கள் என கூறப்படும் 20 இற்கும் மேற்பட்டவர்கள், அங்கு பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் வாய்க்காலை வெட்டிக் கொண்டிருந்த பிரதேச மக்களை விரட்டியடிக்க முற்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, பிரதேசவாசிகளுக்கும், உழவு இயந்திரத்தில் வருகை தந்த குழுவினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த நிலையில், சம்பவ இடத்திற்கு வருகை தந்த மதுரங்குளி பொலிஸார், கஜூவத்தை - பரியாரி தோட்டம் ஆகிய கிராம மக்களுக்கும், உழவு இயந்திரத்தில் வருகை தந்தவர்களுக்கும் இடையில் ஏற்படவிருந்த பாரிய மோதலை கட்டுப்படுத்துவதற்கு வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இவ்வாறு பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியபோது, அங்கு கூடிநின்ற பிரதேச மக்கள் பொலிஸாருடன் முரண்பட்டுக் கொண்டனர்.

இதனையடுத்து, மதுரங்குளி பொலிஸாருக்கு மேலதிகமாக முந்தல் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டதுடன், பதற்ற நிலைமை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தோட்ட உரிமையாளரிடம் இருந்து சில சலுகைகளைப் பெற்றுக் கொண்டு, தங்களை அச்சுறுத்தும் வகையில் மதுரங்குளி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும், இந்த விடயத்தில் பொலிஸார் பக்கச் சார்பாக நடந்து கொண்டதாகவும் பிரதேச மக்கள் குற்றம் சாட்டினர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமான விலையில் அரிசி வழங்கவேண்டும்

## அரிசி ஆலை உரிமையாளர்களிடம் ஜனாதிபதி அநுரகுமார கோரிக்கை



கொழும்பு, டிசெ. 04

**எதிர்வரும் மாதங்களில் தட்டுப்பாடின்றி நியாயமான விலையில் தொடர்ச்சியாக அரிசியை நுகர்வோருக்கு வழங்க வேண்டும் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களை அறிவுறுத்தியுள்ளார்.**

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கும் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் இடையே நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மக்களுக்குத் தட்டுப்பாடின்றி அரிசியை வழங்கும் வகையில் நாட்டில் களஞ்சிய வசதிகளை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு பெறுமதி சேர்க்கும் உற்பத்திகளுக்கு நாட்டு அரிசியைப் பயன்படுத்துவால், நுகர்வுக்குத் தேவையான இருப்புகளில் தட்டுப்பாடு நிலவுவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

உர மானியத்தைத் தேசிய உற்பத்திக்கான செயல்திறனுடன் பயன்படுத்தும் நோக்கில் கியூ.ஆர். குறியீட்டு முறைமை அறிமுகப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# தேர்தல் செலவு அறிக்கை வேட்பாளர் சமர்ப்பிக்காவிடின் சட்ட நடவடிக்கை!

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 04

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களை, வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் செயலாளர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் தங்களது தேர்தல் செலவு அறிக்கையை எதிர்வரும் 6ஆம் திகதி நள்ளிரவுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறு சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தேர்தல் செலவினங்களைக் கண்காணிக்கும் சட்டத்தின் பிரகாரம் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தமது செலவின அறிக்கையை மாவட்ட தேர்தல் அதிகாரிகளிடம் ஒப்படைக்கவேண்டும் என ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் தமது செலவு அறிக்கைகளைத் தேர்தல் செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்திலோ அல்லது அதற்கு முன்னதாகவோ உரிய அறிக்கைகளை ஒப்படைக்காமல் இருப்பது தேர்தல் ஒழுங்குமுறை சட்டத்தின் கீழ் குற்றமாகும் என்றும், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு எச்சரித்துள்ளது. (அ)

# 2 கோடி ரூபா பெறுமதி மிக்க புத்தர் சிலை திருடிய பிக்குகள்!

கொழும்பு, டிசெ. 04

இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நாக தேவதையுடன் கூடிய பழங்கால உலோக புத்தர் சிலையை திருடிய இரண்டு தேரர்கள் மற்றும் சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர் ஒருவரை மாவனெல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கரஹம்பிட்டிகொடவில் உள்ள செத்தாராம எனும் புராதன விகாரையில் வைக்கப்பட்டிருந்த உலோக புத்தர் சிலையையே சந்தேக நபர்கள் இவ்வாறு திருடியுள்ளனர்.

மாவனெல்ல தெவனகல, வரலாற்று சிறப்பு மிக்க ரஜமஹா விகாரைக்கு சொந்தமான கரஹம்பிட்டிகொட செத்தாராம புராதன விகாரையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான நாகையுடன் கூடிய புராதன உலோக புத்தர் சிலையை சிலர் திருடிச் சென்றுள்ளதாக தெவனகல ரஜமஹா விகாரையின் தலைவர் மாதிரிகிரி புக்னசார தேரர் சமீபத்தில் மாவனெல்ல பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

அதற்கமைய, சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, திருட்டு தொடர்பான விசாரணைகளை கேகாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளார்.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, கிம்புல்விலவத்த தொம்பே பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் 28 வயதுடைய தேரர், கண்டி மஹய்யாவ பிரதேசத்தில் உள்ள விகாரையின் தேரர் மற்றும் பேராதனை கன்னோறுவ பிரதேசத்தில் உள்ள சுற்றுலா ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொம்பே விகாரையின் தேரரின் திட்டத்திற்கமைய இந்த திருட்டு இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு கார்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் மாவனெல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர். (அ)

# அஸ்வெசும கொடுப்பனவில் வினைத்திறனற்ற நடைமுறை

## கிராம சேவகர்கள் சங்கம் அரசு மீது குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 03

அஸ்வெசும நிவாரணக் கொடுப்பனவு தொடர்பாக முன்னாள் அரசாங்கம் கடைப்பிடித்த வினைத்திறன் இல்லாத நடைமுறையையே தற்போதைய அரசாங்கமும் கடைப்பிடித்து வருவதாகக் கிராம சேவகர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதுதொடர்பாக அந்தச் சங்கத்தினால் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நிவாரணக் கொடுப்பனவுக்கான பயனாளிகள் தெரிவின்போது, பிழையில்லாத பொறிமுறை ஒன்றைப் பின்பற்றுமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

அஸ்வெசும கொடுப்பனவு சம்பந்தமான செயற்பாடுகளிலிருந்து கிராம சேவகர்கள் கடந்த மே மாதம் 7ஆம் திகதிக்குப் பின்னர் விலகிக் கொண்டனர்.

இதனை அடுத்து அந்தப் பணிகள் தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையில் நாடளாவிய ரீதியில் பெருமளவான மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைய, அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளைப் பதிவு செய்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கும், நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அதிகளவான மக்கள் நுவரெலியா பிரதேச சபை செயலகத்திற்கு முன்பாக கூடியிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இதனிடையே, அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு கிடைக்கப் பெறாத குடும்பங்கள் அல்லது தனிநபர் தங்களது குறைகளை அறிவிப்பதற்காக எதிர்வரும் 15 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# பாராளுமன்ற உறுப்பினராக நளீம் சத்தியப் பிரமாணம்!

கொழும்பு, டிசெ. 04

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட மொஹமட் சாலி நளீம், நேற்று பாராளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் அசோக ரன்வல முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

முஸ்லிம் காங்கிரஸ் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 87,038 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களை வென்றது.

இதன்படி, கட்சிக்கு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி ஒன்று கிடைத்துள்ளது. அந்த பதவிக்கு நளீமை நியமிக்க கட்சி தீர்மானித்திருந்தது.

இவர் இதற்கு முன்பு ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தலைவராகவும் இருந்தார். (அ)

# எரிவாயு விலை திருத்தம் இன்று

கொழும்பு, டிசெ. 04

மாதாந்த எரிவாயு விலை திருத்தத்தின் பிரகாரம் டிசெம்பர் மாத விலை திருத்தம் இன்று அறிவிக்கப்படும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் தற்போது நிலவும் எரிவாயு விலையுடன் ஒப்பிட்டு இந்த வருடம் எரிவாயுவின் விலை திருத்தம் செய்யப்படவுள்ளதாக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ள நிலையில் எரிவாயு விலையை ஸ்திரமான நிலையில் பேணுவதற்கான பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கான முன்மொழிவுகள் நிதியமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 12.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 3,690 ரூபாவாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது வரை குறித்த விலையே நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 8 வெளிநாட்டவர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 04

விசா இன்றி இந்நாட்டில் தங்கியிருந்த 08 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹாவா எலிய பகுதியில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 28 மற்றும் 65 வயதுடைய இந்தோனேசியப் பிரஜைகள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்னர் சரியான உள்ளக பொறிமுறை தேவை!

## பிரதீபா மஹநாமஹேவா வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 04

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தை தற்போதைய அரசாங்கம் நிராகரித்திருக்கின்றபோதிலும் அது மாத்திரம் போதுமானதன்று எனவும், அதற்கு அப்பால் நாம் என்ன செய்யப்போகிறோம் என்பது பற்றி சிந்திக்கவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியிருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் பேராசிரியர் பிரதீபா மஹநாமஹேவா, எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடருக்கு முன்பதாக நாம் பொருத்தமானதொரு உள்ளகப்பொறிமுறையை நிறுவவேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார்.**

2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச உறவுகள் மற்றும் சட்டம் தொடர்பான சர்வதேச ஆய்வு மாநாடு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பிலுள்ள இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே பிரதீபா மஹநாமஹேவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதன் தொனிப்பொருள் குறித்தும், மனித உரிமைகளை உறுதிப்படுத்திப் பாதுகாக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச கட்டமைப்புக்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் சாசனங்கள், பிரகடனங்கள் குறித்தும் அவர் சுருக்கமாகக் கருத்துரைத்தார்.

அதன் பிரகாரம் ஐக்கிய நாடுக்ள மனித உரிமைகள் பேரவை சாதாரண மக்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்தியும், அவற்றை உறுதிப்படுத்தவேண்டிய கடப்பாட்டை அரசாங்கங்கள் மீது விதித்தும் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் 51/1 என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், அதன் பிரகாரம் இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மீறல்கள் குறித்து ஆதாரங்களைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்ட பிரதீபா மஹநாமஹேவா, ஆனால் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்பின் வெற்றியுடன் இவ்விடயங்களில் எமக்கு ஏற்றவாறான சாதக மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அதேபோன்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தை தற்போதைய அரசாங்கம் நிராகரித்திருக்கின்ற போதிலும், அது மாத்திரம் போதுமானதன்று எனவும், அதற்கு அப்பால் நாம் என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றி சிந்திக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மொட்டுக் கட்சியின் தலைவராகும் நாமல்!

கொழும்பு, டிசெ. 04

பொதுஜன பெரமுனவின் அடுத்த தலைவராக நாமல் ராஜபக்ஷவை முன்னிறுத்துவதற்கான செயற்திட்டங்களை அக்கட்சி முன்னெடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

அதன் பிரகாரம் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போதும் பொதுஜன பெரமுன கட்சியை நாமல் ராஜபக்ஷவே வழிநடத்துவார் என்று அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் போட்டியிட்ட நாமல் 342,781 வாக்குகளைப் பெற்று வெறும் இரண்டரை வீத வாக்குகளுடன் நான்காம் இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

எனினும் கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது பொதுஜன பெரமுனவை நாமல் ராஜபக்ஷவே வழிநடத்தினார்.

இந்நிலையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை கட்சியின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ஷவே வழிநடத்துவார் எனவும்,

இரண்டாம் தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கான ஒத்திகை களமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் பயன்படுத்தப்படவுள்ளது எனவும் பொதுஜன பெரமுன கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் மூலமாக வெகுவிரைவில் பொதுஜன பெரமுன கட்சியின் தலைவராக நாமல் ராஜபக்ஷவை முன்னிறுத்துவதற்கான களத்தை உருவாக்கும் செயற்திட்டங்களை அக்கட்சி முன்னெடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

இந்நிலையில் முன்னாள் அமைச்சரும், பொதுஜன பெரமுண கட்சியின் ஸ்தாபகருமான பசில் ராஜபக்ஷ, தற்போதைய நிலையில் இலங்கைக்கு திரும்பி வரும் உத்தேசத்தில் இல்லை என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை திரும்பி வரும் பட்சத்தில் கடந்த நல்லாட்சிக் காலத்தில் போன்று வழக்குகளில் சிக்கி, சிறைவாசம் அனுபவிக்க நேரிடும் என்ற அச்சம் காரணமாக தற்போதைக்கு அவர் இலங்கை திரும்பும் உத்தேசத்தில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தேங்காய் விலை அதிகரிப்புக்கு அடுத்த ஆறு மாதங்களில் தீர்வு

கொழும்பு, டிசெ. 04

அடுத்த ஆறு மாதங்களில் தேங்காய் விலை அதிகரிப்பு பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என தென்னை பயிர்ச்செய்கை சபையின் தலைவர் சமன் தேவகே குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக சந்தையில் தேங்காய் விலை வேகமாக அதிகரித்து வருகின்றது.

பல பகுதிகளில் தேங்காய் ஒன்று 180 முதல் 200 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

சில இடங்களில் தேங்காய் ஒன்று 220 ரூபாய் வரை அதிக விலைக்கு விற்கப்படுகின்றது.

தென்னை ஏற்றுமதி மற்றும் பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக சுமார் 100 கோடி தேங்காய் அறுவடையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தென்னை பயிர்ச்செய்கை சபை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், இது குறித்து நடவடிக்கை எடுக்கபடும் என தென்னை பயிர்ச்செய்கை சபையின் தலைவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் விரைவில்

கொழும்பு, டிசெ. 04

ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களும் விரைவில் வெளியிடப்படும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பொதுத் தேர்தல் முடிவுகளுக்கமைய ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட ஐந்து தேசிய பட்டியல் ஆசனங்களுக்கான உறுப்பினர்கள் இதுவரை முழுமையாகப் பெயரிடப்படவில்லை.

இதன்படி, தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக ரஞ்சித் மத்தும பண்டார நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த கட்சியின் ஏனைய 4 தேசியப்பட்டியல் ஆசனங்களுக்கான உறுப்பினர்களின் பெயர்கள் வெளியாகவில்லை.

குறித்த தேசியப் பட்டியல் ஆசனங்களுக்காக இரான் விக்ரமரட்ன, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜீ.எல், பீரிஸ், மனோ கணேசன் மற்றும் சுஜீவ சேனசிங்க ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

இதேவேளை, தேசிய பட்டியல் ஊடாக தாம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவது உறுதியாகியுள்ளதாகத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (அ)

# 3 மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமத்தை இடைநிறுத்த நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 04

கலால் கட்டளைச் சட்டத்தின்படி, கலால் வரி செலுத்துவதை தொடர்ந்தும் புறக்கணிக்கும் நிறுவனங்களின் உற்பத்தி நடவடிக்கைகளை இடைநிறுத்தவும், உற்பத்தி உரிமத்தை அடுத்த வருடத்துக்கு நீடிக்காமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு 23 மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு உற்பத்தி உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

கலால் வரி செலுத்தாத நிறுவனங்களுக்கு நிலுவைத்தொகையை செலுத்த நவம்பர் 30ஆம் திகதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், மூன்று நிறுவனங்களைத் தவிர மற்ற அனைத்து நிறுவனங்களும் தங்கள் மதுபான உரிமம் தொடர்பான கலால் நிலுவையை செலுத்தியதாக கூறப்படுகிறது.

அதன்படி, வெலிசர டபிள்யூ எம் மெண்டிஸ் அன்ட் கோ லிமிடெட், குருநாகல் ரோயல் சிலோன் டிஸ்டில்லரீஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் மீகொடமெக்கல்லம் ப்ரூவரி லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் வரி செலுத்தாததால் அந்த நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த வழக்கு தீர்ப்புகளுக்கு அமைய, அந்த நிறுவனங்கள் மீது மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

இதுதவிர வடமாகாணத்தின் வலிகாமம் மதுபான தொழிற்சாலை கலால் வரி நிலுவையை செலுத்தும் வரை மதுபான உற்பத்தியை இடைநிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவதில் விசேட கவனம்!

கொழும்பு, டிசெ. 04

கடந்த சில நாட்களாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

திறைசேரியில் இருந்து தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் வழங்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில நாட்களில் ஏற்பட்ட மோசமான வானிலையால் நாட்டின் 24 மாவட்டங்களில் 139,439 குடும்பங்களைச் சேர்ந்த 469,872 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 18 பேர் உயிரிழந்துள்ளனர். 20 பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸ் பேச்சாளராக கே.பி.மனதுங்க!

கொழும்பு, டிசெ. 04

பொலிஸ்ஊடகப்பிரிவின் புதிய பணிப்பாளராகவும், பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் [illegible] மனதுங்க நியமிக் கப்பட்டார்.

இந்தப் பொறுப்பை ஏற்றுக் [illegible] பொலிஸ் அதியட்சகர் மனதுங்க கந்தளாய் பிரிவில் இருந்து இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவடிப்பள்ளியில் விபத்துகளை தவிர்க்க

# வலுவான தடுப்புகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

கல்முனை, டிசெ. 04

**அம்பாறை மாவட்டம் கிட்டங்கி மற்றும் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் வலுவான தடுப்புகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

அம்பாறை மாவட்டம் கிட்டங்கி மற்றும் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் அடிக்கடி இடம்பெறும் விபத்துகளையும் உயிரிழப்புகளையும் தடுக்க குறித்த பிரதேசங்களில் வீதிப் பாதுகாப்பு தடுப்புகளை ஏற்படுத்துவதுடன் அகலமாக்கும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு சிறீ லங்கா ஜனநாயக கட்சி, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை தவிசாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்," அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட மாவடிப்பள்ளி, கிட்டங்கி ஆகிய இரு இடங்களில் மாவடிப்பள்ளியில் 6 சிறுவர்கள் உட்பட 8 பேரும் மற்றும் கிட்டங்கியில் ஒருவரும் உயிரிழந்தமை வருத்தமளிக்கும் ஒன்றாகும். இது போன்று அடிக்கடி குறித்த பிரதேசங்களில் உயிரிழப்புகள் இடம்பெறுவது வழமையாகி வருகிறது. முக்கியமாக குறித்த இந்த இரண்டு இடங்களின் பாலங்கள் எதிர்காலத்தில் விபத்துகளையும், மரணத்தையும் தவிர்க்கும் விதமாக மாற்றி அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம்.

மேலும், ஒவ்வொரு இடத்தின் இருபுறமும் பாலத்தில் இருந்து வீதி வரை 500 மீற்றர் தூரத்துக்கு வலுவான தடுப்புகள் அமைப்பதுடன், வெள்ள அளவைக் குறிப்பதுடன், எதிர்காலத்தில் இப்பகுதி மற்றும் பிற பகுதிகளின் பயணிகளின் மரணங்கள் தவிர்க்கப்படும். தென்கிழக்கு பிராந்திய கடலோரப் பகுதியை முழு அம்பாறை மாவட்டம் மற்றும் நாட்டின் பிற பகுதிகளுடன் இந்த வீதிகள் இணைக்கும் என்பதால், ஒவ்வொரு ஆண் டும் பருவகால மழை வெள்ளம் காரணமாக, இந்த இடங்களில் ஏதேனும் ஒன்றில் அல்லது இரண்டு இடங்களிலும் இது போன்ற சம்பவங்கள் துரதிர்ஷ்டவசமான மரணத்துடன் நடைபெறுகின்றன.

எனவே, உங்கள் தொழில்நுட்ப பிரிவை கொண்டு இப்பகுதியின் செயல்பாட்டு சூழலை ஆய்வு செய்து, இரண்டு பாலங்களுக்கும் மிகவும் வலுவான தடுப்புகளை அமைக்க அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு வீதிப் பாதுகாப்பை ஏற்படுத்தும் போது நீர் வடிந்தோட இடையூறு இல்லாமல் இருப்பதுடன் எதிர்காலத்தில் இப்பகுதி பயணிகளின் விபத்து மற்றும் மரணத்தைத் தவிர்க்க முடியும் என்றும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(எ)

# எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நடைபவனியும் செயலமர்வும்

கல்முனை, டிசெ. 04




சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய எயிட்ஸ் தடுப்புப் பிரிவு ஏற்பாடு செய்த நடைபவனியும் விழிப்பு ணர்வு செயலமர்வும் நடைபெற்றன.

கல்முனை பிராந்திய எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஐ. எல். ஜலால்டீனால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட இந்த நிகழ்வுகள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்றன.

"உரிமைப் பாதையில் செல்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வைத்திய அத்தியட்சகர்கள், பிரதேச செயலாளர்கள், வலயக் கல்வி பணிப்பாளர்கள், பிராந்திய பிரிவு தலைவர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய சுகாதார நிறுவனங்களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், மாவட்ட எயிட்ஸ் தடுப்பு குழு உறுப்பினர்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன், பிராந்திய பாலியல் எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஐ. எல். ஜலால்டீன், சம்மாந்துறை மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி எம். ஏ. எம். ஹில்மி ஆகியோர் விளக்கவுரையாற்றினர்.

சர்வதேச எயிட்ஸ் தினம் ஆண்டுதோறும் டிசெம்பர் முதலாம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் எயிட்ஸ் நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், எச். ஐ. வியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கிலும் அதனால் உயிரிழந்தவர்களை நினைவு கூறும் வகையில் இத்தினம் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது.

(எ)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகிலா இஸ்ஸதீனின் வழிகாட்டலில் சாய்ந்த மருது பிரதே சத்தில் வெள்ள அனர்த்தத்தின் பின்னர் சாய்ந்த மருது சுகாதார வைத்திய அதி காரி பிரிவுக்குட்பட்ட பொலிவேரியன் கிராமத்தில் டெங்கு நுளம்புகள் பெருகாத வண்ணம் புகை விசிறல் நடவ டிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

இந்த நடவடிக்கைகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

சாய்ந்தமருது, டிசெ. 04

வெள்ள அனர்த்தத்தின் பின்னர் சாய்ந்தமருது பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் தலைமையிலான குழுவினர் நுளம்புகள் பெருகாத வண்ணம் புகை விசிறல் நடவடிக்கை - களப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்முனை பிராந்திய

(எ)

# கடற்கரை பள்ளிவாசலின் 203ஆவது கொடியேற்ற நிகழ்வு ஆரம்பமானது

கல்முனை, டிசெ. 04

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர மக்களால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்பட்டு வரும் ஷாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் அன்னவர்களின் நினைவாக கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்காவில் 203ஆவது கொடியேற்ற விழா திங்கட்கிழமை ஆரம்பமானது.

உலமாக்கள், பக்கீர் ஜமா அத்தினர், நிர்வாகிகள், ஊர் மக்கள் புடைசூழ கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இருந்து புனித கொடியானது தீன் கலிமா முழக்கத்துடன் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கடற்கரைப் பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்கா மினாராக்களில் ஏற்றி வைக்கப்பட்டது.

கொடியேற்றிய தினமான திங்கட்கிழமையிலிருந்து தொடர்ந்து 12 நாட்களுக்கும் பாதுஷா ஷாஹுல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் (கத்தஸல் லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அன்னவர்களின் மீதான புனித மௌலித் ஷரீப் பாராயணம், பக்கீர் ஜமா அத்தினரின் புனித ரிபா ஈ ராதிப், உலமாப் பெருமக்களின் சன்மார்க்கச் சொற்பொழிவு என்பன இடம் பெறவுள்ளதோடு கொடியிறக்க தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி நிறைவடையவுள்ளதுடன்



அன்றைய தினம் மாபெரும் கந்தூரி அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

கொடியேற்ற நிகழ்வில் அரசியல்வாதிகள், அரச உயர் அதிகாரிகள், உலமாக்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ)

# அதிபர் மற்றும் ஆசிரியர் பிணையில் விடுவிப்பு

காரைதீவு, டிசெ. 04

காரைதீவு - மாவடிப்பள்ளி பாலத்தில் உழவியந்திரம் வெள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அரபுக் கல்லூரி மாணவர்கள் 06 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோர் தலா இரண்டு இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் மாணவர்களையும் இன்னும் சிலரையும் ஏற்றிக் கொண்டு சம்மாந்துறைக்கு சென்று கொண்டிருந்த உழவியந்திரம் மாவடிப்பள்ளி பாலத்தில் வெள்ளத்தில் சிக்கி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மாணவர்கள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் அரபுக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர் மற்றும் 02 உதவியாளர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் மத்ரஸாவின் அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

(எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது!

கல்முனை, டிசெ. 04

ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதியில் கல்முனை விசேட அதிரடிப் படையினர் குறித்த இளைஞனை கைது செய்தனர்.

விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேகத்துக்கிடமாக நடமாடிய குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

குருநாகல் பொல்காவலை பகுதியைச் சேர்ந்த 32 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 5 கிராம் 340 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைதான நபர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இந்தக் கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ஆர். ஏ. டி. சி. எஸ். ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் நிறுத்தத்துக்கு இடையே

# இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா ரொக்கெட் வீசி தாக்குதல்

**பெய்ரூட், டிசெ. 04**

**போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இடையே இஸ்ரேல் மீது முதன்முறையாக ஹிஸ்புல்லா ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தியது.**

இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரபூர்வ தகவலை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டார். லெபனானில் நடந்து வரும், ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்புடனான மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரவையும் ஒப்புக் கொண்டது.

எனினும், ஒப்பந்த மீறலில் ஹிஸ்புல்லா ஈடுபட்டால், ஆயுதங்களை கையிலெடுக்க அவர்கள் முற்பட்டால், நாங்கள் தாக்குவோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை வெளியிட்டார். இந்தச் சூழலில், இஸ்ரேல் விதி மீறலில் ஈடுபட்டு விட்டது என ஹிஸ்புல்லா அமைப்பு கூறியது.

இதன் தொடர்ச்சியாக, இஸ்ரேல், லெபனான் மற்றும் சிரியா ஆகிய நாடுகளின் எல்லையையொட்டி அமைந்த இஸ்ரேலின் வடக்கே மவுண்ட் டோவ் பகுதி மீது ஹிஸ்புல்லா அமைப்பு 2 ரொக்கெட்களை ஏவி தாக்குதல் நடத்தியுள்ளது.

கடந்த புதன்கிழமை காலையில் போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த நிலையில், முதன்முறையாக ஹிஸ்புல்லா அமைப்பு ரொக்கெட் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்த ரொக்கெட் தாக்குதலுக்கு பொறுப்பேற்று கொண்டுள்ள ஹிஸ்புல்லா, இதனை இஸ்ரேலுக்கான எச்சரிக்கை எனத் தெரிவித்துள்ளது. (எ)

# ரூ.135 கோடி மின் நிலுவையை உடனடியாக செலுத்த வேண்டும்

## பங்களாதேஷுக்கு திரிபுரா அரசு நெருக்கடி

புதுடில்லி, டிசெ. 04

மின்சாரம் பெற்றதற்கான 135 கோடி ரூபாய் நிலுவைத் தொகையை உடனடியாக செலுத்துமாறு பங்களாதேஷ் அரசுக்கு இந்தியாவின் திரிபுரா மாநில அரசு நெருக்கடி கொடுத்துள்ளது.

பங்களாதேஷில் இந்தியாவுக்கு எதிரான விரோதப் போக்கு அதிகரித்து வருகிறது. அங்கு சிறுபான்மையினராக உள்ள இந்துக்கள் தாக்கப்படுவதுடன், கோவில்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனிடையே இஸ்கான் கோவிலின் குரு சின்மயி கிருஷ்ண தாஸ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதற்கு, இந்தியா சார்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரின் கைதை கண்டித்து மேற்கு வங்க மாநிலத்தில் போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சூழலில், டாக்கா வழியாக செல்லும் அகர்தலா-கொல்கத்தா பேருந்து பங்களாதேஷின் பிரம்மன்பாரியா மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை தாக்குதலுக்குள்ளானது. ஒரு கும்பல் பேருந்தில் பயணம் செய்த பயணிகளை அச்சுறுத்தியதுடன், இந்தியாவுக்கு எதிரான கோஷங்களையும் எழுப்பியது. இதன் தொடர்ச்சியாகவே, நிலுவையில் வைத்துள்ள 135 கோடி ரூபாயை உடனடியாக செலுத்துமாறு பங்களாதேஷுக்கு திரிபுரா அரசு நெருக்கடி கொடுத்துள்ளது. (எ)

# பல நாட்களுக்கு பிறகு மீள சண்டை நிறுத்தம்

பெஷாவர், டிசெ. 04

பாகிஸ்தானின் குர்ரம் பகுதியில் பழங்குடியினர் இடையே பல நாட்கள் நீடித்த மோதல் மற்றும் வன்முறைகளுக்குப் பிறகு சண்டை நிறுத்தம் ஏற்பட்டது.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் பழங்குடியின சமூகத்தை சேர்ந்த இரு பிரிவினர் இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு நீடித்து வருகிறது. கடந்த மாதம் 21ஆம் திகதி குர்ரம் மாவட்டத்தில் ஒரு பிரிவினர் சென்ற வாகனங்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 57 பேர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து மாவட்டம் முழுவதும் இரு பிரிவினருக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது. இதில் இதுவரை 130 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

மாகாண அதிகாரிகள் இரு தரப்பினரையும் அழைத்து பேச்சுகள் நடத்தினர். 7 நாள் சண்டை நிறுத்தம், 10 நாள் சண்டை நிறுத்தம், சமாதான பேச்சுகள் என அவர்கள் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இதனால் மீண்டும் மீண்டும் வன்முறைச் சம்பங்கள் அரங்கேறின. எனினும் தொடர்ந்து சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகாரிகளின் தொடர் முயற்சிகளுக்கு பிறகு இரண்டு பழங்குடியின சமூகத்தினரிடையே நேற்று முன்தினம் மீண்டும் சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பல நாட்களாக நீடித்த சண்டை முடிவுக்கு வந்தது. குர்ரம் மாவட்டத்தில் மோதல் ஏற்பட்ட பகுதிகள் முழுவதும் அமைதி நிலைநாட்டப்பட்டுள்ளதாக பொலிஸ் துணை ஆணையர் ஜாவேதுல்லா மெஹ்சூத் தெரிவித்தார்.

மோதல் நடைபெற்ற பகுதிகளில் வீதிகளை மீண்டும் திறப்பது மற்றும் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடர்பாக பழங்குடியின தலைவர்களின் அமைப்பான ஜிர்கா பேச்சுகள் நடத்தும். ஆயுதமேந்திய பழங்குடியினர் துப்பாக்கிச் சூடு நடத்திய பகுதிகளிலிருந்து அகற்றப்பட்டு, பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் துணை ஆணையர் மெஹ்சூத் தெரிவித்தார். (எ)

# பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும்

## ஹமாஸுக்கு ட்ரம்ப் கடும் எச்சரிக்கை



வாஷிங்டன், டிசெ. 04

தான் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு முன்பாக காஸாவில் பணயக் கைதிகளாக உள்ள இஸ்ரேலியர்களை விடுவிக்க வேண்டும் என்று டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக எச்சரித்துள்ளார்.

இது குறித்து ட்ரம்ப் தெரிவித்தவை வருமாறு, மத்திய கிழக்கில் மிகவும் வன்முறையான, மனிதாபிமானமற்ற முறையிலும், ஒட்டுமொத்த உலக நாடுகளின் விருப்பத்துக்கு எதிராகவும் பிடித்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளைப் பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால், அவை எல்லாம் வெறும் பேச்சளவிலேயே இருக்கிறது. எந்த நடவடிக்கையும் இல்லை.

நான் அமெரிக்காவின் ஜனாதிபதியாக பெருமையுடன் பதவியேற்கும் நாளான ஜனவரி 25 ஆம் திகதிக்கு முன்பாக காஸாவில் இருக்கும் இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால் மத்திய கிழக்கும், மனிதகுலத்துக்கும் எதிராக இத்தகைய அட்டூழியங்களை செய்து கொண்டிருப்பவர்களும் மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டியிருக்கும்.

இதற்கு காரணமானவர்கள் மீது அமெரிக்க வரலாற்றிலேயே யாரும் செய்யாத அளவுக்கு மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும். உடனடியாக பணயக் கைதிகளை விடுவியுங்கள் ஹமாஸ் அமைப்பினருக்கு ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து சுமார் 1200 பேரை படுகொலை செய்து, 200இற்கும் மேற்பட்டவர்களை பணயக் கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச் சென்றனர். இதையடுத்து ஹமாஸ் அமைப்பினரை முற் றிலுமாக ஒழித்துக் கட்டுவதாக சூளுரைத்த இஸ்ரேல், அவர்கள் தங்கியிருக்கும் காஸாவில் தீவிர தாக்குதலை நடத்தி வருகிறது. இதில், இதுவரை 43,500இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இதுவரை இஸ்ரேலிய பணயக் கைதிகள் விடுவிக்கப்ப டவில்லை. அவர்களின் நிலை எவ்வாறு இருக்கிறது என்றும் தெரியப்படுத்தப்படவில்லை. (எ)

குற்ற வழக்குகளிலிருந்து

# மகனுக்கு பொதுமன்னிப்பு வழங்கினார் ஜோ பைடன்



வாஷிங்டன், டிசெ. 04

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது மகனுக்கு குற்ற வழக்குகளிலிருந்து பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

ஹண்டர் பைடன் மீது குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. வரி செலுத்துவதில் முறைகேடு செய்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் ஹண்டர் பைடன் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இந்த வழக்கின் தண்டனை தொடர்பான விசாரணை எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த வழக்கில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் ஹண்டர் பைடனுக்கு அதிகபட்சமாக 17 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

அதேவேளை, சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்ததாகவும், துப்பாக்கி வைத்திருக்க அனுமதிபெற தேவைப்படும் விண்ணப்பத்தில் பொய்யான விவரத்தை தெரிவித்ததாகவும் ஹண்டர் பைடன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. போதைக்கு அடிமையான ஹண்டர் பைடன், தான் போதைக்கு அடிமையானவன் அல்ல என்று துப்பாக்கி தொடர்பான விண்ணப்பத்தில் போலி தகவல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் ஹண்டர் பைடன் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கில் ஹண்டருக்கு குறைந்தபட்சம் 16 மாதங்கள் முதல் அதிகபட்சம் 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

இதனிடையே, அமெரிக்காவில் குற்ற வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட நபர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. அந்த அதிகாரத்தை பயன்படுத்தி பலருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவது வழக்கம்.

இந்த நிலையில், தனது மகனான ஹண்டர் பைடனுக்கு ஜனாதிபதி ஜோ பைடன் தனது அதிகாரத்தை பயன்படுத்தி பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

# பீரங்கி குண்டு வெடித்ததில் 3 சிறுவர்கள் பலி

இஸ்லாமாபாத், டிசெ. 04

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் பீரங்கி குண்டு வெடித்ததில் சகோதரர்கள் உட்பட 3 சிறுவர்கள் உயிரிழந்தனர்.

மதப் பாடசாலையில் இருந்து வீடு திரும்பும் போது கைவிடப்பட்ட பீரங்கி குண்டு ஒன்று கிடந்தது.

அதை குறித்த சிறுவர்கள் பொம்மை என்று நினைத்து விளையாடியபோது எதிர்பாராதவிதமாக அது வெடித்ததில் சிறுவர்கள் மூவரும் உயிரிழந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 146 ஓட்டங்களுக்கு சுருண்டது மேற்கு இந்திய தீவுகள் அணி

## பங்களாதேஷ் 211 ஓட்டங்கள் முன்னிலை



ஜமைக்கா, டிசெ. 04

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 211 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. இதேவேளை, தனது முதல் இன்னிங்ஸில் மேற்கு இந்திய தீவுகள் அணி வெறும் 146 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் டெஸ்ட் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றி பெற்று 1 - 0 என தொடரில் முன்னிலையில் உள்ளது.

இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி ஜமைக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி அந்த அணி தனது முதல் இன்னிங்ஸில் 71. 5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 164 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக ஷத்மான் இஸ்லாம் 64 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் ஜெய்டன் சீல்ஸ் 4 விக்கெட்கள், ஷமர் ஜோசப் 3 விக்கெட்கள் வீழ்த்தினர். தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி, 2ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 70 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் இருந்தது. அந்த அணி சார்பில் பிராத்வெய்ட் 33 ஓட்டங்களுடனும், கீசி கார்டி 19 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்த நிலையில் நேற்று 3ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணியினர், பங்களாதேஷின் அபார பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தனர். இதனால், அந்த அணி தனது முதல் இன்னிங்ஸில் 146 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக கீசி கார்டி 40 ஓட்டங்கள் எடுத்தார். பங்களாதேஷ் தரப்பில் நஹித் ராணா 5 விக்கெட்கள் வீழ்த்தினார். இதன் மூலம் 18 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் 3ஆம் நாள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 193 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இதன் மூலம் பங்களாதேஷ் 211 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. அந்த அணி சார்பில் ஜாக்கர் அலி 29 ஓட்டங்களுடனும், தைஜுல் இஸ்லாம் 9 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் ஷமர் ஜோசப் 2 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். இன்று 4ஆம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது. (எ)

# ஒருநாள் போட்டி தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிப்பு

## தலைவராக மெஹதி ஹசன் நியமனம்



டாக்கா, டிசெ. 04

மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் பங்களாதேஷ் அணியின் தலைவராக மெஹதி ஹசன் மிராஸ் செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் முதலில் டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் போட்டிகள் முறையே டிசெம்பர் 8, 10, 12ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதையடுத்து ஒருநாள் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் காயம் காரணமாக ஷாண்டோ இடம்பெறவில்லை. அதனால் மெஹதி ஹசன் மிராஸ் தலைவராக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அணி விவரம் வருமாறு, மெஹதி ஹசன் மிராஸ் (தலைவர்), லிட்டன் தாஸ் (விக்கெட் காப்பாளர்), தன்சித் ஹசன் தமிம், சௌமியா சர்கார், பர்வேஸ் ஹொசைன் எமான், மஹ்மதுல்லா, ஜேக்கர் அலி அனிக், ஆபிப் ஹொசைன் துருபோ, ரிஷாத் ஹொசைன், நசும் அகமது, தஸ்கின் அகமது, ஹசன் மஹ்மூத், ஷொரிபுல் இஸ்லாம், தன்சிம் ஹசன் சகிப், நஹித் ராணா ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர். (எ)

# பட்மிண்டன் வீராங்கனை சிந்துவுக்கு திருமணம்

ஹைதரா பாத், டிசெ. 04

இரண்டு முறை ஒலிம் பிக் பதக்கம் வென்றுள்ள இந்தியாவின் பட்மிண்டன் வீராங்கனை பி. வி. சிந்து வுக்கு எதிர்வ ரும் 22ஆம் திகதி திரும ணம் நடைபெறவுள்ளது.




ஹைதராபாத்தை சேர்ந்த வெங்கட தத்தா சாய் என்ப வரை சிந்து திருமணம் செய்து கொள்ளவுள்ளார்.

திருமணம் உதய்பூரில் நடைபெற வுள்ளது என்று சிந்துவின் குடும்பத்தினர் கூறினர்.

2024 சையத் மோடி சர்வதேச ஓபன் தொடரில் பி. வி. சிந்து சம்பியன் பட்டம் வென்றார்.

நீண்ட நாட்க ளுக்கு பிறகு அவர் வென்றுள்ள பட்டமாக இது அமைந் துள்ளது.

29 வயதான பி. வி. சிந்து, ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளியும், ரோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலமும் வென்றுள்ளார். 2019இல் உலக சம்பியன்ஷிப் தொடரில் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றுள்ளார். (எ)

# மிட்செல் மார்ஷ் விளையாடுவார்

அடிலெய்ட், டிசெ. 04

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவேன் என்று அவுஸ்திரேலிய வீரர் மிட்செல் மார்ஷ் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிராக பெர்த் நகரில் கடந்த வாரம் நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது அவுஸ்திரேலிய அணியின் சகல துறை வீரர் மிட்செல் மார்ஷுக்கு பந்து வீச்சின் போது கணுக்காலில் வலி ஏற்பட்டது. இதனால் அவர், வரும் 6ஆம் திகதி அடிலெய்டில் தொடங்கும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்பாரா என்பதில் சந்தேகம் நிலவி வந்தது. இதற்கிடையே அவருக்கு மாற்று வீரராக பியூ வெப்ஸ்டரை அணியில் சேர்த்தது அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை.

இந்த நிலையில் மிட்செல் மார்ஷ் கூறும்போது, “எனது உடல் நிலை நன்றாக இருக்கிறது. அடிலெய்ட் டெஸ்ட் போட்டியில் நான் விளையாடுவேன்”- என்றார்.

மிட்செல் மார்ஷ் உடற்தகுதியுடன் இருப்பது அவுஸ்திரேலிய அணிக்கு கூடுதல் பலம் அளிக்கக்கூடும். ஏனெனில் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜோஷ் ஹேசில்வுட் காயம் காரணமாக 2ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து விலகியுள்ளார். (எ)

# “இன்னும் ஒரு சதம் தான்”



அடிலெய்ட், டிசெ. 04

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் விராட் கோலி சதமடித்து அசத்தினார். இந்த நிலையில் இன்னும் ஒரு சதம் அடித்தால் டான் பிராட்மனின் உலக சாதனையை கோலி சமன் செய்வார்.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டியில் இந்தியாவின் வெற்றிக்கு துடுப் பாட்டத்தில் பிரகாசித்த ஜெய்ஸ்வால் 161 ஓட்டங் களும், கோலி 100 ஓட்டங்களும் சேர்த்து அசத்தினர். பந்துவீச்சில் பும்ரா, சிராஜ் மற்றும் அறிமுக வீரர் ஹர்ஷித் ராணா ஆகியோர் அசத்தினர். இதனால் இந்திய அணி 295 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தத் தொடருக்கு முன்னதாக இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் விராட் கோலி சமீப காலங்களில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் தடுமாற்றமாக விளையாடி வந்தார். அதனால் விமர்சனங்களை சந்தித்த அவரால் அவுஸ்திரேலியாவில் சாதிக்க முடியுமா? என்ற கேள்விகள் எழுந்தன.

ஆனால், முதல் போட்டியிலேயே சதமடித்த அவர் விமர்சனங்களுக்கு பதிலடி கொடுத்துள்ளார். மேலும், அவுஸ்திரேலிய மண்ணில் 3 வடிவிலான கிரிக்கெட் போட்டியிலும் அவர் 10 சதங்களை அடித்துள்ளார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவில் அதிக சதங்கள் அடித்த வெளிநாட்டு வீரர் என்ற உலக சாதனையை கோலி படைத்துள்ளார்.

இந்த நிலையில் இந்தத் தொடரில் இன்னும் ஒரு சதம் அடித்தால் குறிப்பிட்ட ஒரு நாட்டில் அதிக சதங்கள் அடித்த வெளிநாட்டு வீரர் என்ற டான் பிராட்மனின் உலக சாதனையை விராட் கோலி சமன் செய்வார்.

டான் பிராட்மன் (அவுஸ்திரேலியா) இங்கிலாந்தில் 11 சதங்கள் அடித்துள்ளார். இவருக்கு அடுத்து விராட் கோலி (இந்தியா) அவுஸ்திரேலிய மண்ணில் 10 சதங்கள் அடித்துள்ளார்.

இந்த சாதனை பட்டியலில் தலா 9 சதங்களுடன் சச்சின் (இந்தியா) மற்றும் ஜாக் ஹோப்ஸ் (இங்கிலாந்து) 3ஆவது இடத்தில் உள்ளனர். (எ)

# போட்டியின்போது மைதானத்தில் மயங்கி விழுந்த ரென்னிஸ் வீரர்

துனிஸ், டிசெ. 04

போட்டியின்போது திடீரென மைதானத்தில் மயங்கி விழுந்த ரென்னிஸ் வீரரால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

துருக்கியை சேர்ந்த ரென்னிஸ் வீரர் அல்டக் செலிக்பிலெக் (வயது -28). இவர் துனிசியாவில் நடைபெற்ற ஐ. டி. எப். ரென்னிஸ் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் யாங்கி எரெல் உடன் மோதினார்.

ஆட்டம் தொடங்கி முதல் செட் நடைபெற்று கொண்டிருந்த வேளையில், திடீரென்று அல்டக் செலிக்பிலெக் மைதானத்தில் மயங்கி விழுந்தார். இந்தச் சம்பவம் அங்கிருந்தவர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. உடனடியாக அவருக்கு முதலுதவி செய்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்து வெளியான முதற்கட்ட தகவலின் படி, மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவு காரணமாக அல்டன் செலிக்பிலெக் மைதானத்தில் மயங்கி விழுந்ததாக கூறப்பட்டுள்ளது. தற்போது மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத...

ஒடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடக வேட்டையில் ஈடுபடுவது நியாயமா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும் இவ்வளவு பெரிய ஆணையைப் பெறுவதற்கு சமூக ஊடகத் துறையிலிருந்து உங்களுக்கு நிறைய ஆதரவு கிடைத்தது. ஆனால் இந்த நேரத்தில் இந்த சமூக ஊடக ஆர்வலர் கள் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி வேட்டையாடப்படுகிறார்கள். நீக்கப்படும் என்று கூறப்பட்ட பயங்கரவாதச் சட்டத்தை நிறுத்துங்கள் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

## அமெ...

வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது என அறிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், ஊழலுக்கு எதிராக போராடுதல் மற்றும் மக்கள் உறவுகளை வலுப்படுத்துதல் போன்றவற்றில் அமெரிக்கா - இலங்கை கூட்டு முயற்சிகளை முன்னெடுப்பதற்காக உதவிச் டொனால்ட் லூ நாளை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாராளுமன்றில்...

தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றில் கருத்துரைத்த நளின் பண்டார, பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு முன்பாக முறையற்ற விதத்தில் செயற்பட்டதாகவும் முறையற்ற வசனங்களைப் பயன்படுத்தியுள்ளதாகவும் குற்றஞ் சாட்டினார்.

அத்துடன் இந்த விடயம் குறித்து சபாநாயகரிடம் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தினார்.

இதேவேளை, அவரை தொடர்ந்து எழுந்த பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா, பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிப்பதாகவும் அவர் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார். (அ)

## மாகாணசபை...

ரில்வின் சில்வா, மாகாண சபை முறையை இல்லாதொழிக்க போவதாக பத்தி ரிகைகளுக்கு குறிப்பிட்டிருந்த விடயத்தைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை யாகக் கருத வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது குறுக்கிட்ட சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்னநாயக்க, இராசமாணிக்கம் சாணக்கியன் மீது மிகுந்த மரியாதை கொண்டிருப்பதாகவும் ஏனையோர் சொல்வதைக் கேட்டு முறையற்ற சந்தேகங்களை எழுப்ப வேண்டாம் எனவும் கோரினார்.

அதேநேரம் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் இது விடயமாக ஜனாதிபதியிடம் கலந்துரையாடல் ஒன்று நடத்த அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரிவித்த பிமல் ரத்னநாயக்க, ஜே.வியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அன்றி ஜனாதிபதியுடன் சந்திப்புக்கு ஒழுங்குபடுத்துவதாகவும் இந்த விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும் குறிப்பிட்டார். (அ)

## மூன்று...

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் வல்வெட்டித்துற பதில் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணகளை மேற்கொண்டார். சாட்சிகளை வல்வெட்டித்துறை பொலிஸார் நெறிப்படுத்திய நிலையில் சடலம் உடற் கூற்று பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-02)

## நாட்டில்...

மீதான பாராளுமன்ற விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீண்ட காலமாக உருவாக்கப்பட்ட நிலையான கொள்கையொன்றை முன்வைத்துள்ளோம்.

பாரம்பரியமான தேர்ந்த அரசியல் ஆட்சியை மக்கள் நிராகரித்துள்ளனர். இந்தச் செய்தியை நாம் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

நீண்ட காலமாக, நமது நாட்டின் நிர்வாகம் கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்தது. இதன் காரணமாக அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது.

ஊழல் மிகுந்த அரசியல் கலாசாரத்தை மக்கள் முற்றாக நிராகரித்துள்ளனர்.

மக்கள் நிராகரிப்பது அரசியலை அல்ல, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் அரசியல் கலாசாரத்தையே நிராகரிக்கின்றார்கள்.

ஒருபோதும் காணாத பெண்களின் பிரதிநிதித்துவம் தற்போது பாராளுமன்றில் காணப்படுகிறது.

மேலும் எமது அமைச்சரவையில் உரிய துறையுடன் மிகவும் பொருத்த மானவர்களையே அப் பதவிகளுக்கு நியமித்துள்ளோம். தேசிய பட்டியல் விடயத்திலும் நாம் பல்வேறு கருத்துகளை உள்வாங்கி சரியானவர்களை நியமித்தோம்.

அத்தோடு பயங்கரவாதத்தை முற்றாக புறக்கணிப்போம். எம்மோடு இணைந்து செயற்பட அனைவரும் முன்வாருங்கள்- என்றார். (அ)

## அரச...

விரைவில் குறைக்க வேண்டும்.

எதிர்காலத்தில் தற் போதைய செலவீனத்தை திறை சேரியால் தாங்க முடியாது. நாட்டில் தற்போது உள்ள 13 இலட்சம் அரச பணியாளர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் ஏழரை இலட்சமாக குறைக்கப்பட வேண்டும்.

முன்னோக்கிச் செல்லும்போது, கருவூலத்தில் இருக்கும் நிதி எதிர்வரும் ஆண்டுகளில் போதுமானதாக இருக்காது என்பதை என்னால் தெரிவிக்க முடியும்.

பாரிய பொதுத்துறையை நடத்தும் திறன் எம்மிடம் இல்லை. எனவே, பொது சேவைகளை பகுத்தறிவு செய்து, பணியாளர்களின் எண்ணிக்கையை குறைத்து, இலத்திரனியல் மயமாக்கலை நோக்கிச் செல்லவேண்டும்.

நாங்கள் 1.3 மில்லியன் பணியாளர்களை குறைந்த பட்சம் 750,000 ஆக குறைக்க விரும்புகின்றோம். மீதமுள்ள பணியாளர்களுக்கு திறமைக்கு போட்டி கொடுப்பனவு வழங்க விரும்புகின்றோம். இந்தச் சேவைகளை இலத்திரனியல் மயமாக்கத் தொடங்கி, வரி செலுத்துவோர் நிதியை திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

திறமையற்ற சேவைகளை எவ்வாறு கண்டறிந்து, அவற்றைத் தடுப்பது மற்றும் திறமையானதாக்குவது என்பதை அரச பணியாளர்கள் பார்க்க வேண்டும். தனிப்பயனாக்கத்தை நாங்கள் கேட்கவில்லை. அதிக லாபம் ஈட்டவும், சிறந்த திறமையான சேவையுடன் பொதுமக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம் என்றார் அவர். (அ)

# எல்லை தாண்டிய மீன்பிடி; 18 இந்திய மீனவர் கைது!

கொழும்பு, டிசெ. 04

எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந் திய மீனவர்கள் 18 பேர் கைதுசெய்யப்பட் டுள்ளதாக கடற்படை தலைமையகம் நேற்று தெரிவித்துள்ளது.

வெற்றிலைக்கேணி பகுதிக்கு அண்மித்த கடற்பரப் பின் சர்வதேச கடற்பரப்பிலிருந்து 30 மைல்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஓர் இந்தியமீன்பிடிப் படகில் மீன்பிடியில் ஈடுபட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கையின் காரணமாக நாட்டின் மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாகின்றது . ஆகவே அதனை தடுக்கும் நோக்கில் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கையை தடுக்க கடற்படையினர் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இந்நிலையில் எல்லை தாண் டிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட மீன்பிடிப்படகு மற்றும் இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அழைத்துவரப்பட்டுள்ளதுடன், சட்ட நடவடிக்கைக நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

குறித்த 18 இந்திய மீனவர்களையும் யாழ்ப்பாணம் நீரியல்வளத்துறை அதிகாரிகள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இவ் வழக்கை விசாரித்த நீதிபதி கிருசாந்தன் பொன்னுத்துரை மீனவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டார். (அ-2)

# மருந்துத் தட்டுப்பாடு விரைவில் தீர்க்கப்படும்!

கொழும்பு, டிசெ. 04

குறிப்பிட்ட சில வகை மருந்துகளின் பற்றாக்குறையை அடுத்த சில நாட்களுக்குள் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ நேற்று தெரிவித்துள்ளார்.

உயர்தர மருந்துகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்கும் என அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இன்சுலின், சோடியம் பைகார்பனேட், கார்போபிளாட்டின் மற்றும் இரினோடெகன் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் திறமையின்மை உள்ளது. சில நிறுவனங்களில் சில அதிகாரிகள் ஊழலில் ஈடுபட்டுள்ளனர். இது போன்ற பிரச்னைகளை சரி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளோம்,"- என்றார். (அ)

## சபை...

சீரற்ற வானிலையினால் ஏற்பட்ட அனர்த்த நிலை தொடர்பில் இன்று மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரை சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## அரசை...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆட்சியைக் கவிழ்ப்பதாக கருத்து வெளியிடும் எதிர்கட்சிகளுக்கு வெளியே தெரியாவிடினும், அவர்களின் பணி தொடர்பான கோப்புகள் உள்ளிருந்து உருவாக்கப்படுகின்றன.

இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் ஒன்றிரண்டு வழக்குகள் நீதிமன்றத்துக்கு வரும்.

வழக்குகள் விசாரிக்கப்பட்டு தீர்ப்புகள் வரும்போது, அரசைக் கவிழ்க்க நினைப்பவர்கள் சிறைக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. அரசை யாராலும் கவிழ்க்க முடியாது - என்றார். (அ)

## டிசெம்பர்...

ஈடுபடவுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார் எனவும், வர்த்தக சமூகத்தினருடனும் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோரும் ஜனாதிபதியுடன் டில்லி செல்லவுள்ளனர். மீனவர் பிரச்னை சம்பந்தமாகவும் சந்திப்பின்போது கலந்துரையாடப்படவுள்ளது. (அ)

## சுயநிர்ணய...

முதலாவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகியிருந்த நிலையில், சபை அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யின் பாராளுமன் றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் தனது உரையில்-

இலங்கையில் இனவாதத்தை எவரும் பேசக் கூடாது என ஆளுங்கட்சியினர் வலியுறுத்துவது எமக்குப் புதிய நம்பிக்கையைத் தந்திருக்கிறது. எண்பது ஆண்டுகளின் முன்பிருந்த இலங்கையின் ஆட்சியாளர்களிடம் இத்தகைய மனநிலை இருந்திருந்தால், தமிழினம் அடக்கப்பட்ட இனமாக, இனவாதத்தால் வஞ்சிக்கப்பட்ட இனமாக இத்தனை துயரங்களை அனுபவிக்கும் நிலை ஏற்பட்டிருக்காது.

கடந்த காலங்களில் தமிழர் தரப்பால் அரசாங்கங்களோடு மேற்கொள்ளப்பட்ட எந்தப் பேச்சுவார்த்தைகளும் எமக்கு சாதகமாக அமையவில்லை என்ற நம்பிக்கையீனங்களைக் கடந்து, புதிய அரசின் ஆட்சிக்காலத்தில் இனவாதமற்ற இலங்கை நாட்டில் தமிழர்களது சுயநிர்ணய உரிமைகள் அங்கீகரிக்கப்படும் நிலை உருவாகுமானால், நாங்கள் உங்களோடு இணைப்பங்காளர்களாக பயணிக்கத் தயாராக இருக்கிறோம்.

இடதுசாரிக் கொள்கை அடிப்படையில் வளர்ச்சிகண்ட ஜே.வி.பியினரிடத்தே அடக்குமுறை இருக்காதென்றும், ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்ற மார்க்சியமும், லெனினிசமும், சேகுவேரா, மாவோ சேதுங் போன்ற புரட்சியாளர்களின் சிந்தனைப் போக்கும் மேலோங்கியிருக்க வேண்டும் என்றுமே நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நீங்கள் சிந்திய இரத்தமும், செய்த தியாகமும் இன்று உங்களை இந்த சிம்மாசனத்தில் ஏற்றியிருப்பதைப் போல, ஈழவிடுதலைப் போராட்டத்தில் எமது மாவீரர்களும், மக்களும் செய்த உயிர்த்தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் எங்கள் இனத்தின் இருப்பை உறுதி செய்யும் நிலையை உருவாக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## நிறுத்தப்பட்ட உயர்தர பரீட்சை இன்று முதல் மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 04

சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை கடந்த 25ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில், கன மழை காரணமாக 27ஆம் திகதி முதல் பரீட்சை நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

அதன்படி இன்று முதல் மீண்டும் பரீட்சை ஆரம்பிக்கப்படும் எனவும், இன்று இடம்பெறவுள்ள பாடங்களின் படி பரீட்சைகள் வழமை போன்று நடைபெறும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பரீட்சை நடைபெறாத நாட்களில் நடக்கவிருந்த பாடங்களை எதிர்வரும் நாட்களில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## கோபா தலைவர் பதவிக்கு ஹர்ஷ டி சில்வாவின் பெயர்!



கொழும்பு, டிசெ. 04

10 ஆவது பாராளுமன்றத்தின் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் பெயரை முன்மொழிவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - பிளவர் வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக இரண்டு சந்தர்ப்பங்களில் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராகப் பதவி வகித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா மீண்டும் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு புதிய ஜனநாயக முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்றக் குழுவின் தலைவராகக் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அநுராத ஜயரத்ன பெயரிடப்பட்டுள்ளார். (அ)

## அரிசியின் விலை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 04

அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியின் மொத்த விலையை மீண்டும் உயர்த்தியுள்ளனர்.

நாடு, சம்பா மற்றும் கீரி சம்பா அரிசியின் மொத்த விலையை அதிகரித்துள்ளதாக அரிசி ஆலை உரிமையாளர்கள் நாடளாவிய ரீதியில் உள்ள அரிசி மொத்த வியாபாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

அதன்படி, ஒரு கிலோ கிராம் நாட்டு அரிசியின் மொத்த விலை 255 ரூபாவாகவும், சம்பா அரிசி 260 ரூபாவாகவும், கீரிச் சம்பா 275 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அந்த விலைக்கு தேவையான அரிசியின் அளவுக்கான கட்டணத்தை வங்கியில் செலுத்துமாறு அரிசி ஆலை உரிமையாளர்கள் வியாபாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

சந்தையில் நாட்டு அரிசியின் கட்டுப்பாட்டு விலை ரூ.220, சம்பா ரூ.230, கீரி சம்பா ரூ.260, அந்த விலைக்கு விற்பனை செய்யவேண்டும் என நுகர்வோர் அதிகார சபை சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியின் விலையை அவ்வப்போது அதிகரிப்பதால் கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்க முடியாமல் தவிப்பதாக அரிசி மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் அரிசி ஆலை உரிமையாளர்கள் நாடு அரிசியை ரூ.235-240, சம்பா ரூ.250, கீரிச் சம்பா ரூ.260-265 என மொத்த விலையில் வியாபாரிகளுக்கு வழங்கியுள்ளனர். (அ)

# டியாகோ கார்சியா தீவில் இருந்து 60 இலங்கைத் தமிழர் பிரிட்டனுக்கு!

### 3 ஆண்டு அவல வாழ்க்கைக்கு முடிவு

லண்டன், டிசெ. 04

**இந்தியப் பெருங்கடல் தீவான டியாகோ கார்சியாவில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக சிக்கியிருந்த புலம்பெயர்ந்த இலங்கைர்கள் குழுவொன்று இங்கிலாந்துக்கு அழைத்து செல் லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

16 குழந்தைகள் உட்பட 60 பேர் அடங்கிய இலங்கைத் தமிழர்கள் குழுவொன்றே இவ்வாறு இங்கிலாந்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பி.பி.சி. தெரிவித்துள்ளது.


கடந்த 2021 நவம்பர் மாதம் முதல் இந்த குழுவினர் டியாகோ கார்சியா தீவில் அடிப்படை வசதிகள் இன்றி மிகவும் மோசமான நிலையில் வசித்து வந்துள்ளனர்.

இவ்வாறு, இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள இலங்கை தமிழர்கள், அந்நாட்டில் 6 மாத காலம் தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த ஆறு மாதங்களுக்கு தேவையான நிதி வசதியையும் அந் நாட்டு வெளிவிவகார அமைச்சு வழங்க தீர்மானித்துள்ளது.

இவர்கள் தீவில் இருந்த காலப் பகுதியில், பல உண்ணாவிரதங்கள் மற்றும் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டதாகவும் அதில் சிலர் சிகிச்சைக்காக ருவாண்டாவுக்கு மாற்றப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முகாமுக்குள் பாலியல் வன் கொடுமைகள் மற்றும் துன்புறுத்தல் போன்ற குற்றச்சாட்டுகளும் பதிவாகியுள்ளதாக 'பி.பி.சி' தெரிவித்துள்ளது. (அ)



# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது; அரசை சாடுகின்றது மொட்டுக் கட்சி

கொழும்பு, டிசெ. 04

"பிரபாகரனுக்கு எதிராக சமூகவலைத்தளங்களில் பதிவுகளை பதிவிட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் பிரபாகரனை கடவுள் என விளித்து மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தியவர்களுக்கு எதிராக இன்னும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை." - என்று பொதுஜன பெரமுன கட்சி சீறிப் பாய்ந்துள்ளது.

கொழும்பிலுள்ள அக்கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் கூறியவை வருமாறு-

மக்கள் மத்தியில் குரோதத்தை விதைப்பதற்கு ஜே.வி.பியினர் சமூகவலைத்தளங்களையே பயன்படுத்தினர். போலியான தகவல்களை சமூகவலைத்தளங்களில் பரப்பி அரசியல்வாதிகளின் வீடுகளை தீக்கிரையாக்குவதற்கு வழிவகுத்தனர்.

ஆனால் தற்போது ஆட்சி அதிகாரம் அக்கட்சியினருக்கு கிடைத்துள்ள நிலையில், சமூக ஊடக செயல்பாட்டாளர்களை ஒடுக்கும் செயல் முன்னெடுக்கப்படுகின்றது. சமூக ஊடக செயல்பாட்டாளர்கள் கைது செய்யப்படுவதை நாம் கண்டிக்கின்றோம்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் எனக் கூறி வந்த ஜே.வி.பியினர் அந்த சட்டத்தின்கீழ்தான் கைதுகளை செய்துள்ளனர்.

வடக்கு, கிழக்கில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான தகவல்கள் ஊடகங்களில் வெளியாகின. நிகழ்வு நடக்கவில்லை எனக் கூறமுடியாது. அந்நிகழ்வு பற்றி கதைத்த சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது சமூக ஊடக செயல்பாட்டாளர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகும்.

பிரபாகரனுக்கு எதிராக சமூகவலைத்தளங்களில் இடப்படும் பதிவுகளுக்கு எதிராக பொலிஸார் செயல்பட்டுள்ளனர். ஆனால் பிரபாகரனை கடவுள் என விளித்து, மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தியவர்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை கவலையளிக்கின்றது - என்றார். (அ)

## அஸ்வெசும கொடுப்பனவை அதிகரிக்க அரசு நடவடிக்கை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, டிசெ. 04

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் வறுமை நிலையில் உள்ள பயனாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அதன்படி, வறிய நிலையில் உள்ள பயனாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை 10,000 ரூபாவாகவும், மிக வறிய நிலையில் உள்ள பயனாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை 17,500 ரூபாவாகவும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார். (அ)

## 45,600 டெங்கு நோயாளர்கள் பதிவு!

கொழும்பு, டிசெ. 04

நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 45,600 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் மாத்திரம் 3,178 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சமூக வைத்திய நிபுணர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை காரணமாக பல நோய்கள் பரவக்கூடிய வாய்ப்பு உள்ளதாக அவர் கூறினார்.

அதன்படி, இரண்டு நாட்களுக்கும் அதிகமாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தால் வைத்தியரின் ஆலோசனையை பெற வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## குற்றப் புலனாய்வு திணைக்கள பணிப்பாளராக பெண் அதிகாரி



கொழும்பு, டிசெ. 04

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக மகளிர் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எச்.டபிள்யூ.ஐ. இமேஷா முதுமால நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பிரதி பொலிஸ்மா அதிபர்கள் உட்பட 54 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இதன்போது, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றிய மகளிர் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எச்.டபிள்யூ.ஐ.எஸ்.முதுமால குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## விமான நிலையத்தில் மட்டு. வர்த்தகர் கைது!

கொழும்பு, டிசெ. 04

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 50 இலட்சம் ரூபா பெறுமதியான அழகுசாதனப் பொருட்களுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய வர்த்தகர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இந்தியாவின் மும்பை நகரத்திலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 02.40 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து இந்த அழகுசாதனப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org